நகர்மன்றம்,
போடிநாயக்கனூர், நாள். 30.05.2018

2018ம் ஆண்டு ஜீன் மாதம் 30.05.2018ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திரு.மா.சுவாமிநாதன்,
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்

**1)** இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ''ஏப்ரல்2018''ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 93 பதிவு செய்யப்பட்டது.**

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.3650/2017/சி1)**

**2)** இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ''ஏப்ரல் 2018''ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 94 பதிவு செய்யப்பட்டது.**

**அலுவலக குறிப்பு :** மன்றம் பதிவு செய்ய அனுமதிக்கப்பட்டது.
**(ந.க.எண்.3650/2017/சி1)**

**3)** இந்நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 05.02.2009ல் பணியிடை மரணமடைந்த திரு. மாரியப்பன் / மதுரைவீரன் என்பவரது வாரிசு தொடர்பாக தேனி சார்பு நீதிமன்ற நீதிபதி ஆணை 03/04, நாள்:02.02.2017ன்படி திரு.ஆர்.முருகன், வாரிசுதாரர் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் திரு.ஆர்.முருகன் என்பவருக்கு திரு. மாரியப்பன்/மதுரைவீரன் என்பவரது இறப்பு கால பணிக்கொடை வழங்குவது தொடர்பாக சட்டக்கருத்துரு கோரப்பட்டு, சட்டக்கருத்துரு வழங்கியமைக்கு திரு.M. கருப்பசாமி பாண்டியன், அரசு வழக்கறிஞர் உயர்நீதிமன்ற மதுரை கிளை, அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 5000/– வழங்க மன்றத்தின் அனுமதிக்கு,

**தீர்மான எண்: 95 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 1481 /2017/எச்1 )**

4) துணை இயக்குநர், பொது சுகாதாரம் நோய் தடுப்பு மருந்து துறை, தேனி அவர்களின் மருத்துவ குழுவினர் சோலையூர் கிராமத்தில் 08.04.2018ம் தேதி மருத்துவமுகாம் நடைபெற்ற போது சோலையூர் மற்றும் சிறைக்காடு கிராம மக்கள் கலந்து கொண்டு ஈக்கள் தொல்லை அதிகமாக இருப்பதால் நோய் பரவும் அபாயம் உள்ளது என தெரிவித்துள்ளனர். மேலும் இந்நகராட்சி வாரச்சந்தை, தினசரி மார்க்கெட், ஆட்டி மனை மற்றும் பேருந்து நிலையங்களில் மே, ஜுன், ஜுலை ஆகிய மாதங்களில் மாம்பழங்கள் மற்றும் பலாபழங்கள் வரத்தும் அதிகமாக வாய்ப்பு உள்ளதால் ஈக்களின் உற்பத்தி அதிகமாகும். ஈக்களின் உற்பத்தியினைகட்டுப்படுத்தும் (Retimix) ரெடிமிக்ஸ் மருந்து இருப்பில் இல்லாமல் உள்ளது. எனவே ஈக்கள் மூலம் பரவும் தொற்றுநோய்கள் தடுக்கும் வண்ணம் ரெடிமிக்ஸ் மருந்து 750 லிட்டர் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 5,00,000/–னை 2018–19ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு,

**தீர்மான எண்: 96 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 1110 /2018/எச்2 )**

**5)** இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் 7ம் பகுதி நகராட்சி உயர்நிலைப்பள்ளி, 10ம் பகுதி நகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் வளர்இளம் பெண்கள் மற்றும் அலுவலக பணிபுரியும் பெண்கள் உரிய காலத்தில் பயன்படுத்தும் சுகாதார நாப்கின்களை (Sanitary Napkin) பொதுசுகாதார முறைப்படி அப்புறப்படுத்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இன்சினேட்டர் சாதனம் 3 எண்ணம் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1,50,000/—னை 2018—19ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு,

**தீர்மான எண் : 97 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**
**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 1038 /2018/எச்2 )**

6) இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் காம்பிக்டர் லாரி வாகனம் (TN60 S- 5118) வஞ்சி ஒடையில் உள்ள பெட்டியில் உள்ள குப்பையை லோடு ஏற்றிக் கொண்டிருக்கும் போது கியர்பாக்ஸ் பழுது ஏற்பட்டு வாகனத்தை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதினை நீக்கம் செய்ய TV Sundaram Iyengar son’s private limited. Theni நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு மேற்கண்ட பழுது பணிக்கு ரூ. 25,712/—க்கு பட்டியல் தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண் : 98 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**
**அலுவலகக் குறிப்பு :-** மேற்கண்ட வாகனத்தில் உள்ள கியர்பாக்ஸ் பழுதினை நீக்கம் செய்து வழங்க TVS, Theni நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் அதற்கான செலவினத்தொகை ரூ. 25,712/— 2018—19ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1050 /2018/எச்2 )**

7) இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் காம்பிக்டர் லாரி வாகனம் (TN60 A 1176) வாகனத்தின் முன்பக்க 2 டயர்கள் மற்றும் பின்பக்க 4 டயர்கள் மிகவும் தேய்ந்து இயக்க முடியாத சூழ்நிலையில் மேற்படி வாகனத்திற்கு 6 டயர்கள் புதிதாக பொருத்த 16.04.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | TV Sundaram Iyengar Son's, Private Limited, Theni. | 79,000/- |
| 2 | Sethuraman motor's workshop, Periyakulam. | 81,800/- |

**அலுவலகக் குறிப்பு :-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய TV Sundaram Iyengar Son's private limited, Theni நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் அதற்கான செலவினத்தை 2018–19ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 99 அனுமதிக்கப்பட்டது.**
**(ந.க.எண். 0986/2018/எச்2 )**

8) பிளாஸ்டிக் ஒழிப்பு மேலாண்மை திட்டம் 2016ன் கீழ் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு தொடர்பாக 50 மைக்ரான் அளவிற்கு மேலாக பிளாஸ்டிக் உற்பத்தி மற்றும் விநியோகம் செய்பவர்கள் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை கட்டணம் செலுத்தி பதிவு செய்தல் மற்றும் 50 மைக்ரான் அளவிற்கு குறைவான பிளாஸ்டிக்களை உபயோகிப்பவர்கள் மற்றும் விற்பனை செய்பவர்கள் மீது வசூல் செய்யப்படும் அபராத தொகை தொடர்பான அட்டவணை உள்ளடக்கிய விளம்பரத்தினை நீதி வலை, தமிழ் மாத இதழில் 2018 ஏப்ரல் மாத பதிப்பில் விளம்பரம் செய்தமைக்கு நீதி வலை, சென்னை நிறுவனத்திலிருந்து ரூ. 14,300/–க்கு விளம்பரக் கட்டணம் வரப்பெற்றுள்ளது. எனவே நீதி வலை, சென்னை நிறுவனத்திற்கு விளம்பர கட்டணமாக ரூ.14,300/–செலுத்தவும் அதற்கான செலவினத்தை 2018–19ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கு,

**தீர்மான எண்: 100 அனுமதிக்கப்பட்டது.**
**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 6465/2016/எச்2 )**

9) போடிநாயக்கனூர் நகராட்சி பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு, கொசு ஒழிப்பு புகை மருந்து அடித்தல் போன்ற பணிகளுக்காக 1939ம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வு சட்டம் விதி 53(1) (2) மற்றும் (3)ன் படி தேவைக்கேற்ப கொசுப்புழு ஒழிப்பிற்கு தற்காலிக மஸ்தூர்கள் மூலம் மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 1819/2016/L3, நாள். 08.11.2016ம் தேதிய கடிதத்தில் தற்காலிக மஸ்தூர் பணிகளை ஒப்பந்த தொழிலாளர்கள் மூலம் மேற்கொள் தெரிவித்ததற்கிணங்க ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 30 தற்காலிக பணியாளர்களை ஒப்பந்த அடிப்படை பணியமர்த்தப்பட்டும் தற்பொழுது துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், தேனி அவர்களின் கடிதம் ந.க.எண் 1875/அ3/2016, நாள். 12.08.2017ல் தேனி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் தாக்கம் தொடர்ந்து இருப்பதாலும், தென்மேற்கு பருவமழை பெய்வதாலும், மற்றும் அருகில் உள்ள மாவட்டங்களிலும் கேரளா மாநிலத்திலும் டெங்குவின் தாக்கம் அதிகமாக இருப்பதாலும், போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்க, கொசுபுழு ஒழிப்பு பணி, கொசு ஒழிப்பு புகை மருந்து

அடித்தல் பணி மற்றும் பொதுமக்களுக்கு டெங்கு தடுப்பு வழிமுறைகள் தொடர்பாக நலக்கல்வி அளித்தல் பணி போன்ற பணிகளை தொடர்ந்து முழுமையாக மேற்கொள்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தற்காலிக பணியாளர்கள் போதுமானதாக இல்லை என் தெரிவித்தும் கூடுதலாக இந்நகராட்சிக்கு 30 தற்காலிக மஸ்தூர் பணியாளர்களை நியமனம் செய்து டெங்கு ஒழிப்பு பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டு இந்நகராட்சியில் 60 தற்காலிக பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்படி 60 தற்காலிக மஸ்தூர் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் முன் அனுமதி பெற்று ஏப்ரல் –2018ம் மாதத்தில் பணியமர்த்தியமைக்கும், வேலை உத்தரவு வழங்கியமைக்கும் ஏப்ரல் 2018 முதல் செப்டம்பர் 2018 வரையிலான ஆறு மாத காலங்களுக்கு பணியமர்த்த தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2017–18ம் ஆண்டு தினக்கூலி மஸ்தூர் பணியாளர்களின் ஊதிய விகித அடிப்படையி (நாள் ஒன்றுக்கு 208/–) வீதம் ESI & EPF (13.5%) உட்பட, தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 2018–19ம் ஆண்டு செலவினத் தொகை ரூ. 28,00,000/–னை 2018–19ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 101 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு :-** டெங்கு தடுப்பு நடவடிக்கைக்கு மேற்படி 60 தற்காலிக மஸ்தூர் பணியாளர்களை நியமித்து பணி மேற்கொள்ள, அவர்லேண்ட இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடேட், சென்னை நிறுவனத்தன் மூலம் ஏப்ரல் – 2018ம்மாதத்தில் பணியமர்த்தியமைக்கும், (ஏப்ரல் –2018 முதல் செப்டம்பர் -2018வரை 6 மாத காலத்திற்கு பணி மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ. 28,00,000/–னை 2018–19ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 6709/2013/எச்1)**

**10)** இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் கழிவு நீர் ஊற்றி வாகனம் (TN60 Z 3534) தகுதி சான்று முடிவடைவதால் வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து தகுதி சான்று பெறும் பணிக்கு 07.02.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை பெற பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை ரூ |
| --- | --- | --- |
| 1. | TV Sundaram Iyengar Son's, Private Limited, Theni. | 1,27,650/- |
| 2 | சேதுராமன் மோட்டார்ஸ், பெரியகுளம். | 1,29,880/- |

**அலுவலகக் குறிப்பு :-** மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய TV Sundaram Iyengar Son's private limited, Theni நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் அதற்கான செலவினத்தை 2018–19ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 102 அனுமதிக்கப்பட்டது.**
**(ந.க.எண். 974/2018/எச்2)**

**11)** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண்**35083/2013/**ஜே**3**, நாள். **14.06.2017** நகராட்சி/மாநகராட்சி துப்புரவு பணியாளர்களால் தொடரப்பட்ட மறு சீராய்வு வழக்கில் சென்னை உயர்நீதிமன்ற முழு அமர்வு **30.05.2017**ம் தேதிய தீர்ப்பு அரசுக்கு எதிராக வழங்கப்பட்டதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு (SLP) தொடர உடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு மேல்முறையீடு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலக துப்புரவு பணியாளர்கள் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்யப்பட்டு மூன்றாண்டு முடித்தவுடன் பணி நிரந்தரம் செய்யப்படாமல் அரசாணை(நிலை) எண் அளவின் படி **23.02.2006**க்கு பிறகு பணி நிரந்தரம் செய்யப்பட்டது தொடர்பாக தொடரப்பட்ட வழக்கிற்கு சென்னை உயர்நீதிமன்ற முழு அமர்வு வழக்கு Rev.Applc(MD)No.87/2014 in WA(MD)No.729/2013-ற்க்கு **30.05.2017**ம் தேதி தீர்ப்பு அரசுக்கு எதிராக வழங்கப்பட்டதை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த வழக்கு எண் Special Leave Petition(c) No. **22176/2017**/vide Diary No **20664/2017** -ற்க்கு Towards appearance fee dated 01.09.2017 preparation of paper books and other Documents etc.,incidental and other expenses and process fee and clerkage fees ஆகிய கட்டணங்களுக்கு திரு.I.கணேசன், Government Standing Council Supreme Court of India அவர்களுக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் **19.03.2018**ம் தேதி முன் அனுமதி பெற்று ரூ. **65,000/–** வழங்கியமைக்கும் அதற்கான செலவினத்தை **2017–18** ஆம் ஆண்டு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 103 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** அவசர அவசியம் கருதி மன்றத்ன் அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்த வழக்கு எண் Special Leave Petition(c) No. 22176/2017vide Diary No 20664/2017 -க்கு ஆஜராமைக்கு மற்றும் இதர செலவினங்களுக்கு ரூ. **65,000/–** வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2760/2018/எச்1)**

**12)** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அவர்களின் **02.03.2018**ம் தேதிய நேரடி அறிவுரைகளின்படி இந்நகராட்சி பகுதியின் குடியிருப்பு பகுதி, வணிக நிறுவன பகுதி மற்றும் உரக்கிடங்கு ஆகியவற்றில் குப்பை மாதிரிகளை எடுத்து ஆய்வகத்தில் ஆய்வு செய்து ஆய்வறிக்கை (Test Report) வழங்கியமைக்கு M/s Green Link Analytical and Research Laboratory (India) Private Limtied, Coimbatore நிறுவனத்திற்கு ஆய்வுக் கட்டணம் ரூ. **16,225/–** வழங்கவும் அதற்கான செலவினத்தை **2018–19**ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு,

**தீர்மான எண்:104 அனுமதிக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 371/2015/எச்2)**

**13)** இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் TN60 S 2049 TATA Ace வாகனத்தின் தகுதி சான்று **28.04.2018** உடன் முடிவடைவதால் மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்து தகுதி சான்று பெற்று தரும் பணிக்கு **03.04.2018**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை பெற பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | TV Sundaram Iyengar Son's, Private Limited, Theni. | 1,09,375/- |
| 2 | Sethuram Motor Workshop, Periyakulam. | 1,14,150/- |

**அலுவலகக் குறிப்பு :-** மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய TV Sundaram Iyengar Son's private limited, Theni நிறுவனத்திற்கு மன்ற முன் அனுமதியினை எதிர்நோக்கி வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினத்தை **2018–19**ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 105 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**
**(ந.க.எண். 0862/2018/எச்2 )**

**14)** போடிநாயக்கனூர் நகராட்சி **15**ம் பகுதி நகராட்சி பணி வளாகத்தில் இயங்கி வரும் உதவி தொடக்க கல்வி அலுவலர் அலுவலகத்தில் சிறு மராமத்து பணிகள் செய்யக் கோரி விண்ணப்பம் வரப் பெற்றதன் அடிப்படையில் இடம் பார்வையிடப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீடு தொகை ரூ. **2.50** லட்சத்தினை பொதுநிதியில் இருந்து செலவு செய்ய அனுமதி கோரப்படுகிறது, உத்தரவிற்கு,

**தீர்மான எண்:106 அனுமதிக்கப்படுகிறது.**
**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 1610/2018/இ1 )**

**15)** போடிநாயக்கனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வ.உ.சி நகர் வார்டு–**10**, சர்வே வார்டு–**2**, பிளாக் எண்–**51**, நகரளவு எண்–**3995/9B** மற்றும் **3995/10A** ல் உள்ள இடத்தில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக சாலை வசதி செய்து கொடுக்க வரப்பெற்ற கோரிக்கையின் அடிப்படையில் நகரளவு எண்–**3995/9B**ல் **344** சதுர அடியும், **3995/10A**ல் **376** சதுர அடியும், மொத்தம் **720** சதுர அடி இடமானது சாலை வசதி செய்து கொடுக்க தேர்வு செய்யப்பட்டுள்ளது. நகரளவு ஆவணங்களில் போடிநாயக்கனூர் கூட்டுறவு பண்டக சாலை என உள்ளது. மேற்படி நகரளவு எண்களில் உள்ள 720 சதுர அடி இடத்தை பொது மக்கள் பயன்பாட்டிற்காக சாலை வசதி அமைக்க வேண்டியுள்ளதால் மேற்படி இடத்தினை போடிநாயக்கனூர் கூட்டுறவு பண்டக சாலை பெயரிலிருந்து, போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையாளர் பெயருக்கு நிலமாற்றம் செய்ய மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 107 மன்ற பொருள் ஒப்புதல் அளிக்கப்பட்டது.**
**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
**(ந.க.எண். 1351 /2018/எப்1 )**

**16)** போடிநாயக்கனூர் வட்டம் குரங்கணி மலைப் பகுதியில் **11.03.2018**ம் தேதி ஏற்பட்ட தீ விபத்து தொடர்பான அரசு முதன்மை செயலாளர் அவர்களின் **28.03.2018**ம் தேதிய விசாரணைக்கு நகர்மன்ற கூட்ட அரங்கின் **21** கணினிகளை HOD மூலம் இணைத்து Network பணியினை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மொர்குரி சாப்ட்வேர், பெரியகுளம் நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் அதற்கான பட்டியல் தொகை ரூ. **7500/- 2018–19**ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:108 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 0924/2018/E1)**

**17)** போடிநாயக்கனூர் நகராட்சி முதல் நிலை நகராட்சியாக **22.05.1938** முதல் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி **7.23** சதுர கிலோ் மீட்டர் பரப்பளவு கொண்ட **33** வார்டுகளாக பிரிக்கப்பட்ட முதல் நிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சியின் மக்கள் தொகை **2011** கணக்கெடுப்பின் படி **75,665** ஆகும். இந்நகராட்சி பகுதியில் தினசரி மார்கெட் மற்றும் வாரச்சந்தை நடைபெற்று வருகிறது. இந்நகராட்சிக்கு பொது சுகாதார பணிக்கு அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர் பணியிடம் **146** ஆகும். இதில் **74** துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். **72** பணியிடம் காலியாக உள்ளது. இந்நிலையில் அரசாணை எண் **101**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். **30.04.1997**ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர் அளவுகோலின் படி **270** பணியிடங்களாகும். இதில் **146** நிரந்தர துப்புரவு பணியாளர் பணியிடங்கள் **(54+70) 124** துப்புரவு பணியாளர் பணியிடங்களை வெளியாட்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நாள்தோறும் நகர்பகுதியில் சேகரமாகும் **33** மெட்ரிக்டன் திடக்கழிவுகளை நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் தரம் பிரித்து உரம் தயாரிக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் போதுமான துப்புரவு பணியாளர்கள் இல்லாததால் காலியாக உள்ள **72** நிரந்தர துப்புரவு பணியாளர் பணியிடத்தில் **20** துப்புரவு பணியாளர் பணியிடங்களை வெளியாட்கள் மூலம் (Out-sourcing) மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்:109 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1729 / 2018 / எச்2)

18)இந்நகராட்சிப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல், சிக்கன்குனியா போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டு கொசுப்புழு மற்றும் டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் நல்ல நீரில் உற்பத்தியாகும் கொசுப்புழு மற்றும் கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் (பைரத்திரம்) **PYRETRHERUM 2% EXTRACT -600 லிட்டர்** மருந்தினை, வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 7.50 இலட்சத்தினை 2018–19ம் நிதியாண்டின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்:110 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1646/ 2018/எச்2)

19) இந்நகராட்சிப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல், சிக்கன்குனியா போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டு கொசுப்புழு மற்றும் டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் நல்ல நீரில் உற்பத்தியாகும் லார்வா புழுக்கள் ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தி வரும் Indoor Foging Machine (Hand Fog) கேஸ் சிலிண்டர் 126 எண்ணம் மட்டுமே கையிருப்பு உள்ளது. எனவே 3மாதங்களுக்கு தேவையான Indoor Foging Machine (Hand Fog) கேஸ் சிலிண்டர் 1000 எண்ணம் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 2,70,000/-னை 2018–19ம் தேதி நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 111 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1404/ 2018/எச்2)

20)இந்நகராட்சிப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல், சிக்கன்குனியா போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டு கொசுப்புழு மற்றும் டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் நல்ல நீரில் உற்பத்தியாகும் லார்வா புழுக்கள் ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் **அபேட் (TEMEPHOS)** கையிருப்பு 13.50 லிட்டர் மட்டுமே கையிருப்பு உள்ளது. மழைக்காலம் என்பதால் (June15) **அபேட் (TEMEPHOS)** 100 லிட்டர் மருந்தினை வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1.80 இலட்சத்தினை 2018–19ம் நிதியாண்டின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 112 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1403/ 2018/எச்2)

21)இந்நகராட்சிக்கு சொந்தமான சிறைக்காடு கலவை உரக்கிடங்கில் கலவை உரம் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த 10 ஆண்டுகளாக சேகரம் செய்யப்பட்ட சுமார் 60,000 மெட்ரிக் டன் குப்பைகளை மக்க வைப்பதற்கும், தினசரி உரம் தயாரிப்பதற்கும் EFFECTIVE MICRO ORGANISM –EM SOLUTION 500 லிட்டர் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 4.75 இலட்சத்தினை 2018–19ம் நிதியாண்டின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 113 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1644/ 2018/எச்2)

22)இந்நகராட்சிக்கு சொந்தமான சிறைக்காடு கலவை உரக்கிடங்கில் கலவை உரம் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த 10 ஆண்டுகளாக சேகரம் செய்யப்பட்ட சுமார் 60,000 மெட்ரிக் டன் குப்பைகளால் ஈக்கள் தொல்லை அதிகமாக உள்ளதால் அங்கு பணிபுரியும் பணியாளர்களுக்கு இடையூராகவும் உடல்நலக்குறைபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. மேலும் நகரில் முக்கிய இடங்கள் மற்றும் MCC பணியிடங்கள், Onsite Compost போன்ற இடங்களில் ஈ தொல்லைகள் உருவாகாமல் பொதுமக்களை உடல்நலக்குறைபாடு ஏற்படா வண்ணம் பாதுகாக்க வேண்யுள்ளதால் Lemon Cross Oil – 170 லிட்டர் வாங்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 4.95 இலட்சத்தினை 2018–19ம் நிதியாண்டின் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 114 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1645/ 2018/எச்2)

**23)**இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் TN 60 S – **1992** ஏற்பட்டுள்ள இஞ்சின் பழுது பணியினை சரிசெய்ய **25.08.2018**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | RAJ ENGINEERING WORKS, வத்தலகுண்டு. | 23650/- |
| 2. | J R ENGINEERING WORKS, வத்தலகுண்டு. | 26100/- |
| 3. | MANI ENGINEERING WORKS, வத்தலகுண்டு. | 25100/- |

<u>அலுவலகக் குறிப்பு</u> வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய RAJ ENGINEERING WORKS, வத்தலகுண்டு நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினத்தை **2018–19** நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 115 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**
(ந.க.எண் 0059/2018/எச்2)

**24)**இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் TATA ACE வாகனம் TN60 S–**2049** ஏற்பட்டுள்ள இஞ்சின் பழுது பணிகளை சரிசெய்ய **25.01.2018**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | RAJ ENGINEERING WORKS, வத்தலகுண்டு. | 25360/- |
| 2. | J R ENGINEERING WORKS, வத்தலகுண்டு. | 27010/- |
| 3. | MANI ENGINEERING WORKS, வத்தலகுண்டு. | 29250/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய RAJ ENGINEERING WORKS, வத்தலகுண்டு நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும், அதற்கான செலவினத்தை **2018–19** நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 116 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**
(ந.க.எண் 0058/2018/எச்2)

25)இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் 74 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மற்றும் 70 தற்காலிக துப்புரவு பணியாளர்கள் ஆக மொத்தம் 144 துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான தளவாடச்சாமான்கள் கையிருப்பு குறைவாக இருப்பதால் துப்புரவு பணியாளர்களுக்கு தேவையான தளவாடச்சாமான்கள் வாங்கவும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ. 5.00/– இலட்சத்தினை 2018–19ம் ஆண்டு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 117 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1711/2018/எச்2)

26)இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரியும் 74 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மற்றும் 70 தற்காலிக துப்புரவு பணியாளர்கள் ஆக மொத்தம் 144 துப்புரவு பணியாளர்களுக்கு 2018–19ம் நிதியாண்டிற்கு பாதுகாப்பு உபகரணங்களான கையுறை, கம்பூட், மழை அங்கி, ஒளிரும் மேல்சட்டை, தலைகவசம், முககவசம் மற்றும் குப்பை லாரி வலைகள் வழங்கவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ. 6.90/– இலட்சத்தினை 2018–19ம் ஆண்டு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 118 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1712/2018/எச்2)

27)இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு 1 முதல் 33வது வார்டு வரையிலான பகுதிகளில் தேவையான செடி மற்றும் புல்வெட்டும் இயந்திரம் (GRASS GUTTING MACHINE) 6 எண்ணம் வாங்கி வழங்கவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ. 2.40/– இலட்சத்தினை 2018–19ம் ஆண்டு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**தீர்மான எண்: 119 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1991/2018/எச்2)

28)போடிநாயக்கனூர் நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டம் மேற்கொள்ளும் பணிக்கு ஒருங்கிணைந்த நகர்புற வளர்சித் திட்டத்தின் கீழ் அரசாணை எண்.225, நாள்.05.09.2012 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் ரூ. 71.10 கோடிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு மேற்கண்ட பணி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு தற்போது சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் 12500 புதிய பாதாள சாக்கடை இணைப்பு பணிகள் ரூ. 5.60 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 19.02.2018ம் தேதிய ந.க.எண். 4210/பாசாதி–1/2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் 22.02.2018ம் தேதிய ந.க.எண். 18281/2016/Do1 கடிதத்தில் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ந.க.எண். 261/2018/E1, நாள். 14.05.2018ல் புதிய பாதாள சாக்கடை இணைப்புப் பணி மேற்கொள்ள எக்கோ புரொடக்ஸன் எஞ்சினியர்ஸ் (பி) லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது. பாதாள சாக்கடை வீட்டிணைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 6266/2015/பாசாதி1, 22.08.2016ம் தேதிய ஆய்வுக் கூட்ட நடவடிக்கைகளில் பாதாள சாக்கடை இணைப்புகள் வழங்குவது விரைவுபடுத்தும் பொருட்டு நகர்மன்ற அனுமதி பெற்று பாதாள சாக்கடை இணைப்பு கோருபவர்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகையினை 4 தவணைகளாக சொத்து வரியுடன் சேர்த்து வசூல் செய்து முதல் தவணைத் தொகை செலுத்தியுடன் புதிய பாதாள சாக்கடை இணைப்புப் பணிகள் உடன் மேற்கொள்ளப்பட வேண்டும் என உத்திரவு வரப்பெற்றுள்ளது.

அதனடிப்படையில் தேனி மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்ட வைப்புத் தொகையினை கீழ்க்கண்டவாறு 4 தவணைகளில் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>குடியிருப்பு:-</u>

| இட பரப்பளவு | வைப்புத்தொகை மற்றும் மேற்பார்வை கட்டணம் | தற்போது வசூல் செய்ய வேண்டிய முதல் தவணை தொகை | 3 சம தவணைகளில் வசூல் செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 300 ச.அடிக்கு குறைவானவை | 2500– | 2000– | 167/ஒரு தவணை |
| 301–600 ச.அடிக்கு உட்பட்டவை | 5500– | 2000– | 1167/ ஒரு தவணை |
| 601–1000 ச.அடிக்கு உட்பட்டவை | 9500– | 2000– | 2500/ ஒரு தவணை |
| 1001–2000 ச.அடிக்கு உட்பட்டவை | 15,500– | 2000– | 4500/ ஒரு தவணை |
| 2001 சதுரஅடிக்கு மேல் | 20,500– | 2000– | 6167/ ஒரு தவணை |

## வணிகம்:

| இட பரப்பளவு | வைப்புத்தொகை மற்றும் மேற்பார்வை கட்டணம் | தற்போது வசூல் செய்ய வேண்டிய முதல் தவணை | 3 சம தவணைகளில் வசூல் செய்யப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 300 ச.அடிக்கு குறைவானவை | 5500– | 2000– | 1167/ ஒரு தவணை |
| 301–600 ச.அடிக்கு உட்பட்டவை | 10500– | 2000– | 2834/ ஒரு தவணை |
| 601–1000 ச.அடிக்கு உட்பட்டவை | 18,500– | 2000– | 5500/ ஒரு தவணை |
| 1001 ச.அடிக்கும் மேல் உள்ள இனங்கள் | 30,500– | 2000– | 9500/ ஒரு தவணை |

1) மேற்கண்டவாறு முதல் தவணை வசூல் செய்து உடனடியாக புதிய பாதாள சாக்கடை இணைப்பு பணி மேற்கொள்ளவும் மீதமுள்ள வைப்புத் தொகையினை மேற்க்கண்டவாறு 3 சம தவணைகளில் பாதாள சாக்கடை இணைப்புதாரர்களிடம் இருந்து சொத்து வரியுடன் சேர்த்து வசூல் செய்யவும் அனுமதி கோரப்படுகிறது.
2) புதிய பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகள் வழங்கும் பணிக்காக ஆகும் செலவினத்தினை இணைப்புதாரர்களிடம் இருந்து 10 சம தவணைகளாக சொத்துவரியுடன் சேர்த்து வசூல் செய்ய மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**தீர்மான எண்: 120 மன்ற பொருள் அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்: 261 /2018/இ1)

29)இந்நகராட்சிக்குட்பட்ட 13,14,21,22 மற்றும் 23 ஆகிய வார்டுக்குட்பட்ட பகுதிகளில் இருந்து வரக்கூடிய கழிவுநீர் PH ரோட்டில் உள்ள பெரிய கழிவுநீர் கால்வாயில் ஒன்று சேர்ந்து வார்டு 13–ல் நகராட்சி காலணி செல்லும் பாலம், வார்டு 14–ல் பழைய பேருந்து நிலையம் (நகராட்சி பள்ளி அருகில் உள்ள பாலம்), டாக்டர் வேல்ராஜ் மருத்துவமனை அருகில் உள்ள பாலம் வழியாக கழிவு நீர் நகரின் எல்லை பகுதிக்கு சென்றடைகிறது. மேற்படி பாலங்களில் சாக்கடை மண் மற்றும் குப்பைகள் உள்ளதால் கழிவு நீர் செல்லாமல் தேங்குவதால் அவ்விடங்களில் கொசு உற்பத்தி அதிகமாகி தொற்று நோய் ஏற்படும் வண்ணம் உள்ளது. மேலும் மேற்படி ஆழமான கால்வாயில் உள்ள சாக்கடை மண் மற்றும் குப்பைகளை மனித சக்தி மூலம் சுத்தம் செய்ய இயலாது. எனவே பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி கால்வாய்களை HITACHI இயந்திரம் மூலம் சுத்தம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 30,000/– னை 2018–19ம் ஆண்டு நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**தீர்மான எண்: 121 அனுமதிக்கப்பட்டது.**

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1789/2018/எச்2)

**30)** இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவில் இயங்கி வரும் காம்பிக்டர் லாரி வாகனம் (TN60 AY 1176) வாகனத்தின் பழுதுகளை சரிசெய்ய **21.05.2018**ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரையப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனம் | தொகை ரூ |
|---|---|---|
| 1. | TV Sundaram Iyengar Son's, Private Limited, Theni. | 87,875/- |
| 2. | ஸ்ரீ கருப்பசாமி பஸ், பாடி பிட்டிங்ஸ், பெரியகுளம். | 1,04,947/- |
| 3. | Sethuraman Motor's workshop, Periyakulam. | 97,040/- |

**அலுவலகக் குறிப்பு :-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய TV Sundaram Iyengar Son's private limited, Theni நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கியமைக்கும் அதற்கான செலவினத்தை **2018–19**ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்:122 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**
**(ந.க.எண். 0986/2017/எச்2 )**

31)போடிநாயக்கனூர் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள கடைகள் மற்றும் தொழில் நிறுவனங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு (1920ம் ஆண்டின் தமிழ்நாடு நகராட்சிகளின் திருத்திய சட்டம் 1998ன் படி பிரிவு 124(டி)ன் உட்பிரிவுகள் (2) மற்றும் (13)ன் படியும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை எண்.11, நாள். 12.01.1999ன் படியும் நகராட்சியால் விதிக்கப்படும் தொழில்வரியை 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை சீராய்வு செய்து (Quniquennial revision) திருத்தி அமைக்கப்பட வேண்டுமெனவும் இத்திருத்தம் ஏற்கனவே உள்ள வரி விகிதங்களுக்கு 25 சதவீதம் குறையாமலும் 35 சதவீதத்திற்கு மிகாமலும் நகர்மன்றத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட வேண்டும் எனவும், 1998ம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தொழில்வரி விதிகள் 16ன்படி 01.10.2013 நிறைவேற்றப்பட்ட தொழில்வரி விகிதங்கள் வரும் 01.10.2018 முதல் 25 சதவிகிதத்திற்கு குறையாமலும் 35 சதவிகிதத்திற்கு மிகாமலும் நிர்ணயம் செய்யவும், இது தொடர்பாக ஏற்படும் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அட்டவணை</u>

| வ.எண் | அரையாண்டு சராசரி மொத்த வருமானம் | தற்போது நடைமுறையில் அரையாண்டு தொழில்வரி 30.09.2013 |
|---|---|---|
| 1 | 2 | 3 |
| 1 | ரூ. 21000 வரை | இல்லை |
| 2 | ரூ. 21000 முதல் 30000 வரை | 118 |
| 3 | ரூ. 31001 முதல் 45000 வரை | 294 |
| 4 | ரூ. 45001 முதல் 60000 வரை | 586 |
| 5 | ரூ. 60001 முதல் 75000 வரை | 880 |
| 6 | ரூ. 75001 க்கு மேல் | 1173 |

**தீர்மான எண்:123 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

அலுவலகக் குறிப்பு :- தற்போது அமுலில் உள்ள தொழில்வரி விகிதத்தை 01.10.2018 முதல் 25% சதவிகிதத்திற்கு குறையாமலும் 35% மிகாமலும் உயர்வு செய்ய மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண். 3428/2006/அ3 )

**32)** போடிநாயக்கனூர் நகராட்சி 1வது வார்டு வலசத்துறை சாலையில் ரெயில்வே கிராசிங் அருகில் ஏற்கனவே அமைக்கப்பட்டு இருந்த ஆழ்துளை கிணறு நீர்மட்டம் இறங்கிவிட்டதால் அப்பகுதி மக்களின் பயன்பாட்டிற்காக புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சிறு மின் விசைபம்பு பொருத்தவும், அதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1.50 லட்சத்தினை குடிநீர் வழங்கல் நிதியில் இருந்து மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண். 83, நாள்.27.04.2018ல் அனுமதி வழங்கியதன் படி மேற்கண்ட பணி மேற்கொள்ள 18.5.2018ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.ப. நடராஜன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.01% குறைவு |
| 2 | திரு. என். எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர். | மதிப்பீட்டைக் காட்டிலும் 0.54% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு :-** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.ப.நடராஜன், ஒப்பந்தகாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்: 124 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**
**(ந.க.எண். 1451/2018/இ1)**

33)போடி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் குப்பைகளை தரம்பிரித்து உரமாக்கும் பணி செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இப்பணியில் பயன்படுத்தப்படும் 55 தள்ளுவண்டிகளில் சக்கரங்கள் பழுதடைந்தும் கைபிடிகள் பழுதடைந்தும் வண்டிகளை பயன்படுத்தமுடியாத சூழ்நிலை உள்ளதால் திடக்கழிவு மேலாண்மை பணியினை முழுமையாக செயல்படுத்துவதில் நடைமுறை இடையூறுகள் ஏற்படுகின்றது. எனவே பொது சுகாதாரத்தை பேணிக்காப்பது நகராட்சியின் முக்கியமான பணி என்பதாலும் நிர்வாக நலன் கருதியும் மேற்படி 55 தள்ளுவண்டிகள் பழுது நீக்கம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 1,20,000/—னை 2018—2019—ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்து அனுமதிக்கு.

**தீர்மான எண்: 125 அனுமதிக்கப்பட்டது.**
**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 2274 /2018/H2 )**

34)போடிநாயக்கனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவு இந்நகராட்சியில் தினமும் 33 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உருவாகிறது. அவற்றில் 22 மெட்ரிக் டன் மக்கும் குப்பையும்,11 மெட்ரிக் டன் மக்காத குப்பையும் அடங்கும். மக்கும் குப்பைகளை பொதுமான உரக்கிடங்கிற்கு கொண்டு சென்று இறுதியாக்கம் செய்வதை தவிர்த்து குப்பைகள் உருவாகும் இடத்திலேயே இறுதியாக்கம் செய்யும் வகையில் செய்ய திட்டங்கள் மாற்றி அமைக்குமாறு நகராட்சியின் நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அறிவுரைப்படி இந்நகராட்சிக்கு மூன்று Micro Composting Centre திட்ட அறிக்கை தயார் செய்து அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி 23 வார்டுகளின் குப்பைகளை மட்டுமே கையாள முடியும். மீதமுள்ள 10 வார்டுகளில் குப்பைகள் உருவாகும் இடத்திலேயே உரமாக்கிட Barrel Compost (onsite compost) முறையை செயல்படுத்திடவும், அதற்காக 100 பேரல்கள் வாங்கவும் மற்றும் அதற்கு தேவையான வசதிகள் அமைத்து தரவும் அதற்கான உத்தேச செலவினம் மேற்கொள்ளவும் ரூ. 3,00,000/— னை 2018—2019—ம் ஆண்டு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்து அனுமதிக்கு.

**தீர்மான எண்:126 அனுமதிக்கப்படுகிறது.**
**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 2275 /2018/H2 )**

35)போடிநாயக்கனூர் நகராட்சியில் 2015–16ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் சிறைக்காடு உரக்கிடங்கில் ரூ.110.00லட்சம் மதிப்பீட்டில் இயந்திரங்கள் பொருத்தும் பணிக்கு M/s Zigma global environ solution pvt Ltd., Chennai என்ற நிறுவனத்திற்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டது. மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டில் 1% தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகைக்கு வழிவகை செய்யப்படவில்லை. அரசாணைஎண்.295 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை (12) நாள். 17.12.2013ன்படி ஒப்பந்தப் பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்யும் பொழுது மதிப்பீட்டுத் தொகையில் 1% வழிவகை செய்யப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே அதன் அடிப்படையில் ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்த 1% தொகையை அன்னாருக்கு வழங்கிவிட்டு, 1% தொழிலாளர் நல நதி வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூ. 1,10,000/– ஐ பொது நிதியில் இருந்து செலவு செய்ய மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**தீர்மான எண்: 127 அனுமதிக்கப்படுகிறது.**
**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண். 6833 /2015/E1 )**

36)போடிநாயக்கனூர் நகராட்சிப் பகுதியில் உள்ள ஐந்து நகராட்சிப் பள்ளிகளுக்கு 10எண்ணம் செராமிக் போர்டு ரூ.2,50,000/– மதிப்பீட்டில் வாங்குவதற்கு நகர்மன்ற தீர்மான எண்.77 நாள். 27.04..2018 அன்று அனுமதி அளித்ததன் பேரில் 18.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | M/s Hybrid Interium | Rs. 2,40,000- |
| 2 | M/s Hitech Solution | Rs 2,35,000/- |

**அலுவலகக் குறிப்பு :-** வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள M/s Hitech Solution என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**தீர்மான எண்:128 அனுமதிக்கப்படுகிறது.**
**(ந.க.எண். 1448 /2018/E1 )**

37) இந்நகராட்சியில் குடிநீர் பிரிவில் காலியாக உள்ள குழாய் திருப்புநர் பணியிடத்தை பூர்த்தி செய்ய, தீக்கதிர் நாளிதழ் மூலம் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் செலவினத் தொகை ரூ.5000/– மற்றும் மாலை முரசு நாளிதழ் மூலம் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் செலவினத் தொகை ரூ. 9450/–ம் ஆக மொத்த செலவினத் தொகை ரூ.14,450/–ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மான எண்: 129 அனுமதிக்கப்படுகிறது.**

அலுவலகக் குறிப்பு :- அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி, நாளிதழ் மூலம் விளம்பரம் செய்யப்பட்ட வகையில் செலவினத் தொகை ரூ.14,450/–ஐ நகராட்சியிலிருந்து பொது நிதியிலிருந்து வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 432 /2018/சி1 )**

**தனிஅலுவலர் (ம) ஆணையாளர்**
**போடிநாயக்கனூர் நகராட்சி**